# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 241/2002

Deposition of **P.W.2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr.G.Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 26.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name :நீலாவதி Husband Name : செல்லதுரை

துவக்க நேரம் : 03.27 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் அனுப்படவில்லை என்றால் சரிதான். 1-ம் வாதி அழைத்தன்பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் நான் வசிப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் திருமணம் செய்துகொண்ட ஊர் பூலாம்பாடி என்றால் சரியல்ல, நான் பிறந்த ஊரான நத்தக்கரையில்தான் திருமணம் செய்துகொண்டேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் கூறி தயார் செய்யப்பட்டது என்றால் எனக்கு நேரடியாக தெரிந்த விவரங்கள் என்பதால்தான் நான் கூறி தயார் செய்யப்பட்டது. வாதிகளுக்கு சொந்தமாக 5 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது என நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் நேரடியாக பார்த்துள்ளேன் என்றால் இல்லை, வேலைக்கு சென்றபோது சண்டை நடந்தது பற்றி எனக்கு தெரியும்.

3) வாதி மனோகர் நிலத்திற்கு வேலைக்கு செல்வேனா என்றால் ஆமாம், யார் நிலத்தில் வேலைக்கு கூப்பிட்டாலும் செல்வேன். நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளுக்கு தாவா சொத்தானது பூர்வீகமாகவும், கிரையமூலமாகவும் பாத்தியப்பட்டது என கூறியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி அம்பாயிரம் நிலத்திற்கு கிழக்கில் தென்வடலாக ஓடை செல்கிறது என்றால் சரிதான். அம்பாயிரம் நிலத்திற்கு மேற்கில் வாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அம்பாயிரம் நிலத்திற்கு தென்புறத்தில் வாதிகளின் Hollow Block கற்களால் கட்டப்பட்ட வில்லை கொட்டகை உள்ளது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி நிலத்திற்கும், 1-ம் வாதி நிலத்திற்கும் தென்வடலாக கம்பிவேலி போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் சாட்சியத்திலும், நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கையிலும் கம்பிவேலி போடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் வாதியின் வழக்கிற்கு முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தாவா சொத்திற்கான நான்கெல்லைகள் தவறானவை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு சென்றேதில்லை என்றாலும் அதனால்தான் அதன் நான்கு எல்லைகள் பற்றி தெரியவில்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் எந்த துறையில் என்னென்ன வேலை செய்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் கூலி வேலை செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நத்தக்கரை கிராமத்தில் வசித்து வருவதாக கூறியுள்ள நிலையில் பிரதிவாதிகள் என்ன வேலை செய்து வருகிறார்கள் என்று தெரியாது என கூறுவது தவறு என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண் பற்றி தெரியுமா என்றால் தெரியாது, நான் படிக்கவில்லை. 1-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு கிழபுறத்தில் 30 செண்ட் நிலம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதியின் சகோதரன் கலியன், சகோதரி நல்லம்மாள் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். 1-ம் பிரதிவாதி எனது தாய்மாமன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குடும்பத்துடன் உள்ள முன்விரோத காரணமாக

அவர்களுக்கு எதிராகவும், வாதிகளுக்கு ஆதரவாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு பிரதிவாதிகளுடன் எந்த முன்விரோதமும் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளின் வழக்குபடி தீர்ப்பாக வேண்டுமென கோரியபடி சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு போடப்பட்டதாக கூறியுள்ள நிலையில் எந்த தேதியில், எந்த வாகனம் மூலம் அவ்வாறு ஆழ்துளை போட்டார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்தில் வாதிகள் ஆழ்துளை கிணறு போட்டு அவருடைய 1-ம் வாதியின் கிணற்றிலிருந்த மின் இணைப்பின் மூலம் தாவா சொத்திற்கு நீர் பாய்ச்சி வந்தார் என்று நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எந்த தேதியில் வாதி, பிரதிவாதிகளுக்கு பிரச்சினை ஏற்பட்டது என்றும் எந்த தேதியில் பிரதிவாதிகள் வாதிகளுக்கு இடையூறு கொடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சண்டை நடந்தது தெரியும், ஒரு ஞாயிற்றுகிழமை அன்று 1-ம் பிரதிவாதியுடன் 8 நபர்கள் வந்து 1-ம் வாதியுடன் சண்டை போட்டு தண்ணீர் பாய்ச்சுகளை நிறுத்திவிட்டார்கள். நான் மேற்சொன்னாவாறு எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வாதி யின் வழக்கில் நான் சொல்வது போன்ற எந்த சம்பவமும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் எனது நிரூபண வாக்குமூலத்திற்கு எதிராக தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போர் போட்டு 8 வருடங்கள் கழித்து 1-ம் பிரதிவாதியின் தரப்பினர்கள் வந்து வாதிகளுடன் சண்டை போட்டு தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட்டார்கள். நான் பிரதிவாதிகளுடன் உள்ள முன்விரோதமாக தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு மறு விசாரணை இல்லை.

முடிவு நேரம்: 04.01 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.241/2002, Dt.26.09.2025.